(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 242.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2018 மார்ச்சு 06 செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

135/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ரூபா 400 கோடி வற் வரித் தொகையை மோசடி செய்தமை தொடர்பாக தவறாளிகளாகிய ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் ஒவ்வொரு ஆளுக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகை இவர்களால் செலுத்தப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வற் வரி மோசடியுடன் தொடர்புடைய பலர் இருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அலுவலர்கள் இம் மோசடியுடன் தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்பதையும்;

(iii) சிலர் ஏற்கனவே நாட்டை விட்டு தப்பியோடியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) வற் வரி மோசடியுடன் தொடர்புடைய அனைத்து ஆட்கள் தொடர்பாகவும் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அந்தஸ்துகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1197/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 1983 ஆண்டளவில் யாழ்ப்பாண மாவட்டத்தினுள் காணப்பட்ட,

(i) நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை;

(ii) சிறு குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களின் எண்ணிக்கை;

(iii) அவற்றின் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் அளவு;

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1983 முதல் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரை நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(ii) யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை ஒட்டுமொத்த நீர்ப்பாசனங்கள், குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களின் புனரமைப்புக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1401/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தின் 173 ஆம் முன்மொழிவின் பிரகாரம், கிராமிய கமத்தொழிலுக்கு உதவும் வகையில், சிறு குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2000 மில்லியன் நிதி ஏற்பாட்டின் ஊடாக 2016 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்ட சிறு குளங்கள் மற்றும் கால்வாய்கள் மற்றும் இதற்கென ஏற்கப்பட்ட செலவினம் உள்ளடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iii) சிறு குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைத்தல் பற்றிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட அமைச்சு மற்றும் இவ்வமைச்சுக்கு 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) ரூபா 2000 மில்லியன் பெறுமதியான இப்பாரிய கருத்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கு பல்வேறு மட்டத்தில் பங்களிப்புச் செய்த நிறுவனங்கள் அல்லது அமைப்புக்கள் யாவை என்பதையும்;

(v) கருத்திட்டத்தின் மேற்பார்வைப் பணிக்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1517/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றி பொதுமக்களின் கருத்துக்களை விசாரித்தறியும் குழுவுக்காக அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட மொத்த செலவு எவ்வளவு;

(ii) மேற்படி குழு அங்கத்தவர்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி குழுவுக்கான அங்கத்தவர்களை நியமிக்கையில் கருத்திற்கொண்ட மூலப்பிரமாணங்கள் யாவை;

(iv) பௌத்த மதம் தொடர்பில் அரசியலமைப்பில் உள்ள இரண்டாவது அத்தியாயத்தை அவ்வண்ணமே பேணிவருமாறு விதப்புரை செய்துள்ள குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1647/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாண சபையினால் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஊவா மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை வழங்கியுள்ள உறுதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) காணி உறுதிகள் வழங்கப்பட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் வசிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iv) இந்தக் காணி உறுதிகளை வழங்குவதற்கு ஊவா மாகாண சபை பின்பற்றிய முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1728/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மஹபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) இவர்கள் யாரால் நியமிக்கப்படுகின்றார்கள் என்பதையும்;

(iii) 2010 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையில் இந்நிதியத்திற்கு கிடைத்த பணத் தொகைகள் மற்றும் நிதி கிடைக்கப்பட்ட மூலங்கள் ஆண்டு அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) 2010 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையில் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் மீண்டுவரும் செலவினம் ஆண்டு அடிப்படையில் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) 2005 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மஹபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஊடாக புலமைப் பரிசில் செலுத்துவதற்கும் மீண்டுவரும் செயற்பாடுகள் அல்லாத செயற்பாடுகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், ஒவ்வொரு ஆண்டு மற்றும் செயற்பாடு அடிப்படையில் தனத்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1749/ '17

கௌரவ லக்கி ஜயவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் பேணிவரப்படுகின்ற வானொலி அலைவரிசைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வானொலி அலைவரிசைகளை பேணிவருகின்ற நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி வானொலி அலைவரிசைகளின் உரிமையாளர்கள் யார் மற்றும் மேற்படி அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள திகதிகள் வெவ்வேறாக யாவை;

(iv) இன்றளவில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு ஒலிபரப்பு மேற்கொள்ளப் பட்டுவராத வானொலி அலைவரிசைகள் உள்ளனவா;

(v) ஆமெனில், அந்த அலைவரிசைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற நிறுவனம் யாது;

(ii) தற்போது மேற்படி வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் முறைசார்ந்த வகையில் இடம்பெறுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) சமூகப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் ஒருசில வானொலி அலைவரிசைகள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரங்கள் ஒலிபரப்பப்படுவதை தடுப்பதற்காக வானொலி அலைவரிசைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக முறைசார்ந்த முறையியலொன்றை துரிதமாக தயாரிப்பாரா;

(iv) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1814/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) க.பொ.த (உயர் தர) உயிரியல் மற்றும் கணிதப் பாடத்துறைகள் கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாடத் துறைகளில் ஒவ்வொரு பாடத்துக்கும் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை, இன்றளவில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) க.பொ.த (உயர் தர) விஞ்ஞான பாடத்துறைக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1841/ '17

கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சேவா லங்கா நிறுவனம் "பசுமையை நோக்கிய" என்னும் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்ணைத் திட்டங்களை மேற்கொண்டதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பிரதேச செயலக ரீதியாக திட்டங்களின் அமைவிடத்தை வெவ்வேறாகத் தெரிவிப்பாரா என்பதையும்;

(iii) இத்திட்டங்களுக்கான செலவீட்டுத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இவை தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) அப்பிரதேசத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களுக்கு இத்திட்டத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1862/ '17

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மாநகர திட்டத்தின் (Megapolis Plan) கீழ் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோக்கியுள்ள 03 ஆண்டுகள் வரையில் சீத்தாவாக்கைப் பிரதேச செயலாளர் பிரிவிற்காக திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

(iii) ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டவட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

(iv) இதற்கென அரச மற்றும் தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனின், அம்முதலீடுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது ஆரம்பிக்க எதிர்ப்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதற்காக கடன் தொகைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனின், கடன் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1874/ '17

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கு நிலைமை காரணமாக கிண்ணியா பிரதேசத்தில் குறிஞ்சாக்கேணி பாலம் அழிவடைந்ததென்பதையும்;

(ii) இற்றைவரை இப்பாலம் முழுமையாக மறுசீரமைக்கப்படாது, தற்காலிகமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான மக்கள் பயன்படுத்துகின்ற இப்பாலத்தை மறுசீரமைக்க அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது;

(ii) இற்றைவரை இப்பாலத்தை மறுசீரமைக்காதிருந்தமைக்கான காரணம் யாது;

(iii) இப்பாலத்தை இயலுமான விரைவில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1960/ '17

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2017 மே மாதம் 26 ஆம் திகதி முதல் யூன் மாதம் 05 ஆம் திகதி வரை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக;

(i) உயிரிழந்த ஆளொருவருக்கு வழங்கப்படுகின்ற நட்டஈட்டுத்தொகை எவ்வளவு;

(ii) முழுமையாக மற்றும் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு வழங்கப்படுகின்ற நட்டஈட்டுத் தொகை தனித்தனியே எவ்வளவு;

(iii) வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியமை காரணமாக சகல சொத்துக்களையும் இழந்துள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நட்டஈட்டுத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி நட்டஈட்டுத் தொகையை வழங்க எடுக்கும் காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1979/ '17

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் திரியாய பிரதேசத்தில் அமைந்துள்ள கிரிஹண்டுசேய புனித ஸ்தலத்துக்குரிய காணிகள் நில அளவை செய்யப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அளவைசெய்யப்பட்டு இனங்காணப்பட்டுள்ள நிலத்தின் மீது அடையாளம் இடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அளவைசெய்யப்பட்டதன் மூலம் இனங்காணப்பட்டுள்ள புனித ஸ்தலத்திற்குரிய காணியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) குறிப்பிட்ட வரைப்படங்களை புத்த சாசன அமைச்சுக்கு வழங்குவதில் தாமதம் ஏற்படக் காரணம் என்னவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1981/ '17

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மகாவலி "சுரக்சிததா" முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வயம்ப கால்வாய் கருத்திட்டத்தின் பிரதான கால்வாய் செல்லும் தம்புள்ளை, கலேவல பிரதேச செயலாளர் பிரிவுகளில் 20 கி.மீ. நீளமான கால்வாய்க்கு கீழாக அமைந்துள்ள தற்சமயம் மழைநீரால் மாத்திரம் வளமூட்டப்படும் சிறு குளங்கள், அணைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி சிறிய குளங்கள், அணைகள் முறைமை அனைத்தையும் வளமூட்டுவதற்கு வயம்ப கால்வாய் ஊடாக நீர்ப்பாசன நீர் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) இதற்காக தற்சமயம் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட குளங்களில் வயம்ப கால்வாய் கருத்திட்டத்தினால் நீர் வழங்கப்படும் மற்றும் நீர் வழங்கப்படாத குளங்களின் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) பிரதானமான கால்வாய்க்கு கீழாக உள்ள குளங்கள் அணைகளை வளமூட்டாது, வடமேல் மாகாணத்திற்கு நீரை வழங்குதல் தம்புள்ளை, கலேவல விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதியாக அமையாதா என்பதையும்;

(vi) இதற்குத் தீர்வாக நீர் வழங்கப்படாத குளங்களுக்கு நீரை வழங்குவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

(vii) ஆமெனின், எத்திகதியில் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1991/ '17

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பெருந்தோட்டங்கள் அமைந்துள்ள பிரதேசங்களிலுள்ள பிரதேச சபைகளுக்கு தமது சேவைகளை நிறைவேற்ற முடியாதவாறு பிரதேச சபைச் சட்ட ஏற்பாடுகள் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) அவற்றைத் திருத்துவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) இதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சட்ட ஏற்பாடுகளுக்கான திருத்தங்களின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) அத்திருத்தங்களை மேற்கொள்வதில் ஏதேனும் தடைகள் உள்ளனவா என்பதையும்;

(iii) குறித்த சட்டத் திருத்தங்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது
## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி அமைச்சர்,— நீதித்துறை (திருத்தம்),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017 திசெம்பர் 11) [1].

* 2.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017 திசெம்பர் 11) [1].

* 3.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 27 ஆம் திகதிய 2047/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சரும்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 17 ஆம் திகதிய 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.0 2.1 9 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பாராளுமன்றத்தின் திருத்தப்பட்ட வரைவு நிலையியற் கட்டளைகள்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2018 பெப்ருவரி 19),— "பாராளுமன்றத்தின் திருத்தப்பட்ட வரைவு நிலையியற் கட்டளைகள் தொடர்பாக 2017 நவம்பர் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையினைப் பரிசீலித்தல்." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 7.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2018 பெப்ருவரி 19),— "பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை தொடர்பில், 2017 நவம்பர் மாதம் 07 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் இறுதி வரைவு அங்கீகரிக்கப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 8.

மதுவரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 6(2) ஆம் பிரிவின் கீழ் தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவெம்பர் 07 ஆம் திகதிய 2044/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கட்டளை,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2, 12, 22 மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ், குடிபானமல்லாத ஸ்பிரித்து இறக்குமதிக்கான மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 19 ஆம் திகதிய 2050/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மது அறிவித்தல் இலக்கம் 1005)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்.— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 321 ஆம் பிரிவின் கீழ் 2017 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (சிறியவர்த்தகக் கலன்கள்) ஒழுங்குவிதிகள் தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மே 04 ஆம் திகதிய 2017/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உப தலைவரின் ஊதியங்கள் மற்றும் ஆணைக்குழு அங்கத்தவர்களின் கொடுப்பனவுகளைத் திருத்தியமைத்தல்,— 1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இவ் ஆணைக்குழு அங்கத்தவர்களின் ஊதியங்கள் சட்டத்தின் 4(8) ஆம் பிரிவுக்கு ஏற்ப பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படல் வேண்டுமென்பதையும்;

அதனால், 2017.11.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உப தலைவரின் ஊதியங்கள் மற்றும் இவ் ஆணைக்குழு அங்கத்தவர்களின் கொடுப்பனவுகளைக் கீழ்வருமாறு திருத்தியமைக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

(i) ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உப தலைவருக்கு முறையே ரூபா 75,000/- மற்றும் ரூபா 60,000/- மாதாந்த ஊதியங்களை வழங்குவதற்கும்;

(ii) ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு ஒரு கூட்ட அமர்வுக்கு ஒருவருக்கு ரூபா 6,000/- கொடுப்பனவொன்றை வழங்குவதற்கும்;

(iii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 13/2008(iv)இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக தலைவருக்கு 225 லீற்றர் எரிபொருளின் விலைக்குச் சமனான மாதாந்த எரிபொருள் கொடுப்பனவொன்றையும், உப தலைவருக்கு 170 லீற்றர் எரிபொருளின் விலைக்குச் சமனான மாதாந்த எரிபொருள் கொடுப்பனவொன்றையும் வழங்குவதற்கும்;

அதற்கேற்ப, 1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பிரிவுக்கு அமைவாக, தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர், உப தலைவர் மற்றும் ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கு அரசின் திரட்டு நிதியத்திற்கு செலவாக அமையும் வகையில் ஊதியங்களைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புச் சபையின் விதப்புரைக்கமைய 2015.11.27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) 2015.11.27 ஆம் திகதி முதல் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கமைய SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மாற்றியமைக்கும்போது SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மாற்றியமைத்துச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 14.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சரும்,— பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான சம்பளம் மற்றும் படிகளில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பான அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— பத்தொன்பதாவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக திருத்தப் பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றமையினாலும்;

ஜனாதிபதியினால் 2018.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2018.02.20 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளங்கள் மற்றும் படிகளை 2018.01.01 ஆம் திகதி முதல் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையினாலும்:—

(அ) 3/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கான சம்பளங்கள் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு இணைப்பு 1 ஆக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2018.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தியமைத்தல் மற்றும் சம்பள மாற்றத்தை படிப்படியாக மேற்கொள்ளல் எனும் அடிப்படையில் மேற்கொள்வதற்கும்;

(ஆ) இதுவரை சம்பளத்தில் 25% எனும் அடிப்படையில் செலுத்தப்பட்ட ஓய்வூதியத்துடனான படியை 2018.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 50% வரை அதிகரித்தலும் அந்தப் படியை புதிய சம்பளத்திற்கமைய பெற்றுக்கொள்ளப்படும் சம்பளப் படிநிலையின் அடிப்படையில் கணக்கிடுவதற்கும்;

(இ) மாதாந்தம் ரூபா 15,000/- எனும் வகையில் செலுத்தப்பட்ட ஓய்வூதியமற்ற விசேட படிக்குப் பதிலாக மாதாந்தம் ரூபா 150,000/- ஓய்வூதியத்திற்கு கணக்கிடப்படும் தொழில்சார் படியை செலுத்துவதற்கும்;

அதன் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் 108(1) உறுப்புரையின் பிரகாரம் பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளங்கள் மற்றும் படிகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் திருத்தியமைக்கப்படுமாகவென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**இணைப்பு 1**

**கௌரவ பிரதம நீதியரசர் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்காக 2018.01.01 ஆம் திகதியிலிருந்து ஏற்புடையதாகக் கொள்ளவேண்டிய சம்புள அளவுத் திட்டங்கள்**

| சேவை வகுதி | | | மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் | பிரதம நீதியரசர் |
|---|---|---|---|---|---|
| Service Category | | | Appeal Court Judges | Puisne /President CA | Chief Justice |
| சம்பளக் குறியீட்டு இலக்கம் | | | ஜே.எஸ் 3-2016 | ஜே.எஸ் 4-2016 | ஜே.எஸ் 5-2016 |
| Salary Code | | | JS 3-2016 | JS 4-2016 | JS 5-2016 |
| 1 | 2 | 3 | 4 | 4 | 4 |
| | | | 6,750 | 7,000 | 7,500 |
| | | | 5 | 5 | 5 |
| | | | | | |
| 1 | | | 135,000 | 140,000 | 150,000 |
| 2 | | | 141,750 | 147,000 | 157,500 |
| 3 | | | 148,500 | 154,000 | 165,000 |
| 4 | | | 155,250 | 161,000 | 172,500 |
| 5 | | | 162,000 | 168,000 | 180,000 |
| 6 | | | 168,750 | 175,000 | 187,500 |

- இதுவரை சம்பளத்திலிருந்து நூற்றுக்கு 25 வீதமாகச் செலுத்தப்பட்ட ஓய்வுச் சம்பளத்துடன் கூடிய படியை 2018.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு நூற்றுக்கு 50 வீதமாகி அதிகரித்தலும், அந்தப் படியை புதிய சம்பளத்திற்கமைய பெறப்படும் சம்பளப் படிநிலையின் அடிப்படையில் கணிப்பீடு செய்தலும்.

- மாதமொன்றுக்கு 15,000/- ரூபா வீதம் செலுத்தப்பட்ட ஓய்வுச் சம்பளமற்ற விசேட படிக்குப் பதிலாக 150,000/ ரூபாவான ஓய்வுச் சம்பளத்திற்குக் கணக்கெடுக்கப்படும் தொழில்சார் படியொன்றைச் செலுத்துதல்.

* 15.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சரும்,— ஹைட்ரோபுளோரொகாபனை (Hydroflurocarbons – HFC) கட்டங் கட்டமாக குறைத்தல் சம்பந்தமாக மொன்ட்ரியெல் கூட்டமைப்பு மேற்கொண்ட கிகாலி திருத்தத்திற்கு இலங்கை இணங்கிச் செயற்படல் தொடர்பான பிரேரணை நிறைவேற்றம்,— பூகோள வெப்பமடைதலைக் குறைப்பதற்காக மொன்ட்ரியல் அமைப்பினால் 1990 இல் இலண்டன் திருத்தம், 1992 கோபன்ஹேகன் திருத்தம், 1997 மொன்ட்ரியல் திருத்தம், 1999 பீஜிங் திருத்தம் என பல்வேறு இலக்குகளை அடைந்துகொள்வதற்காக நான்கு சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை உரிய காலப் பகுதிகளில் அந்தத் திருத்தங்களுக்கு இணங்கிச் செயற்பட்டுள்ளதாலும்;

2016 ஆம் ஆண்டின் திருத்தமாக கிகாலி திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக 2050 ஆண்டாகும்போது காபனீரொட்சைட் வாயு 100 பில்லியன் தொன்னுக்கு சமமான பூகோள வெப்பமடைதலுக்கு பங்களிப்புச் செலுத்தும் குளிர்பதனப் பொருட்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கான வாய்ப்புக் கிடைப்பதனால் பூகோள வெப்பத்தை 0.5 பாகை செல்சியஸால் அதிகரிப்பதனைத் தடுப்பதற்கான வாய்ப்பு உருவாகின்றமையினாலும்;

அரசியலமைப்பின் 33(2) (ஏ) இன் கீழ் அரசியலமைப்பின் அல்லது வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது ஏற்பாடுகளுக்கு முரண்படாத சர்வதேச சட்டம், பழக்க வழக்கங்கள் அல்லது பயன்பாட்டிற்கமைய நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடைத்துள்ளதனால் கிகாலி திருத்தத்திற்கு இணக்கம் தெரிவித்தல் ஜனாதிபதியின் தனிச் சிறப்பு அதிகாரத்திற்குட்பட்ட விடயமாகுமென்பதாலும்;

அரசியலமைப்பின் 33அ உறுப்புரையின் கீழ் பொது மக்கள் பாதுகாப்பு சம்பந்தமாக அக்காலப் பகுதியில் செயல்வலுவிலிருந்த சட்டம் உட்பட ஏதேனும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் சுயாதீன அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் பொறுப்புக்களை உரிய பிரகாரம் செயற்படுத்தல் மற்றும் உரிய பிரகாரம் நிறைவேற்றுதல் சம்பந்தமாக ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறல் வேண்டுமென்பதாலும்;

2017 செப்டெம்பர் 29 ஆம் திகதி சனாதிபதி அவர்கள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் என்ற ரீதியில் சமர்ப்பித்த அமைச்சரவை நிருபம் தொடர்பாக எடுக்கப்பட்ட 2017 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய மொன்ட்ரியல் அமைப்பின் புதிய திருத்தமான கிகாலி திருத்தத்திற்கு இணங்கிச் செயற்படுவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளமையினாலும்;

அதன் பிரகாரம், அரசியலமைப்பின் 33அ உறுப்புரைக்கு இணங்கி சனாதிபதி அவர்களின் பிரேரணையொன்றாக ஹைட்ரோபுளோரொகாபனை கட்டங் கட்டமாக குறைத்தல் சம்பந்தமாக மொன்ட்ரியல் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கிகாலி திருத்தம் தொடர்பில் இலங்கை இணங்கிச் செயற்படுவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

* 16.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

புலமைச் சொத்து (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

தீவிரப் பொறுப்பு முகாமை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1 ) ,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 09 ஆம் திகதிய 2044/32 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2 ) ,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 15 ஆம் திகதிய 2045/32 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3 ) ,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 15 ஆம் திகதிய 2045/33 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 26.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4 ) ,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 22 ஆம் திகதிய 2046/14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 27.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5 ) ,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 28 ஆம் திகதிய 2047/25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 28.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை (விலைகளின் மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 திசெம்பர் 14 ஆம் திகதிய 2049/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 30.

நீதி அமைச்சர்,— சட்டக் கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) சட்டக் கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 28 ஆம் திகதிய 2047/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 31.

நீதி அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 பிரிவின் கீழ், பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் நீதியமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 2050/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 32.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 33.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 34.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 35.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

36.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---